# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093613

1. District : தூத்துக்குடி மாவட்டம் | PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி | Year: ஆண்டு 2020 | FIR No.: மு.த.அ. எண் 03/2020 | Date: நாள் 29.10.2020

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 as Amended in 2018 — Sections பிரிவுகள்: 7(a)

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : --

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 27.10.2020 — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு 13.00 மணிக்கு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2020 — Time : நேரம் 08.00 மணி

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.10.2020 — Time : நேரம் 08.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 45 கி.மீ தெற்கு

   Beat Number : முறைக் காவல் எண்

   (b) Address : முகவரி — செயற்பொறியாளர் (விநியோகம்), மின்வாரிய அலுவலகம், திருச்செந்தூர்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.த.முத்துலிங்கம்

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — தங்கையா நாடார்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு

   (d) Nationality நாட்டினம் — இந்தியன்

   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் — வழக்கறிஞர்

   (g) Address : முகவரி — பூவுடையார்புரம், நடுவக்குறிச்சி கிராமம், தூத்துக்குடி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு.பொன்கருப்பசாமி, செயற்பொறியாளர் (விநியோகம்), மின்வாரிய அலுவலகம், திருச்செந்தூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

----

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tmt.C.Jayasree.. Rank ......Inspr......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

29.10.2020 at 10.00 hrs

Name: பெயர் C.ஜெயஸ்ரீ.
காவல் ஆய்வாளர்
Rank: நிலை ஊ.த.(ம).க.துறை. No. எண் ..........
தூத்துக்குடி 29.10.2020.

தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03/2020, பிரிவு 7(a) of PC Act, 1988 as Amended in 2018.

பணிந்தனுப்பப்படுகிறது :-

இன்று (29.10.2020)-ம் தேதி 08.00 மணிக்கு சி.ஜெயஸ்ரீ, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது திரு.முத்துலிங்கம் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவில் திருச்செந்தூர் மின்வாரிய அலுவலக செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.பொன்கருப்பசாமி என்பவர் புகார்தாரரின் மைத்துனருக்கு சொந்தமான சாத்தான்குளம் கிராமம் புல எண் 821/3எப்-ல் பட்டா எண்.4095-ற்கு தக்கல் திட்டத்தில் மின்சார இணைப்பு பெற உதவி மின் பொறியாளர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்ள கடிதம் கொடுக்க ரூ.10,000/- லஞ்சமாக கேட்பதால் நடவடிக்கை எடுக்க தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பற்றி இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட திருச்செந்தூர் மின் வாரிய செயற்பொறியாளர் திரு.பொன்கருப்பசாமி பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் தென்சரக காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம், சென்னை மூலமாக இயக்குநர் அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்தும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 03/2020 பிரிவு 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 படி 29.10.2020-ம் தேதி 09.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் த.முத்துலிங்கம், 42/20, த/பெ.லேட். தங்கையா நாடார், 10/76, பூவுடையார்புரம், நடுவக்குறிச்சி கிராமம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து சாத்தான்குளத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். எனது மைத்துனரும், எனது மதினி சாரதாவின் தம்பியுமான க.மணிமுருகேசன் தற்போது ஹைதராபாத்தில் குடியிருந்து தனியார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். அவருக்கு பூர்வீக சொத்தாக பாத்தியப்பட்ட சாத்தான்குளம் கிராமம் புல எண்.821/3எப்-ல் பட்டா எண்.4095-ல் கண்ட விவசாய நிலத்திற்கு அவரது தந்தை திரு.கணேசன் நாடர் கடந்த 2004-ம் வருடம் சாதாரன முன்னுரிமைத்

திட்டத்தில் விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்து இருந்தார்கள். அந்த விண்ணப்பம் கணேசன் நாடார் பெயரில் வரிசை எண்.51/2003-2004 நாள் 22.01.2004-ன்படி மின்வாரிய அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு இருந்து வந்தது. இந்நிலையில் அவர் கடந்த 12.07.2011—ல் இறந்து போனார். சுமார் 2 மாதத்திற்கு முன்பு கணேசன் நாடார் பெயரில் ஒரு பதிவுத் தபால் திருச்செந்தூர் மின்வாரிய செயற்பொறியாளார் அலுவலகத்தில் இருந்து அவரது வீட்டிற்கு வந்துள்ளது. அங்கு வீட்டில் அப்போது யாரும் இல்லாததாலும், அவர் இறந்துவிட்டதாலும் மீண்டும் அந்த தபால் மின்சாரவாரியத்திற்கே தபால் துறை மூலம் அனுப்பப்பட்டு விட்டது. இந்த தகவல் தெரிந்து மணிமுருகேசனும் நானும் மேற்படி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று இந்த தபால் பற்றி கேட்டபோது ஏற்கனவே கணேசன் நாடார் இலவச விவசாய மின்சார இணைப்பு பெறுவது தொடர்பானது என தெரியவந்தது. உடனே மணிமுருகேசனும் நானும் செயற்பொறியாளர் திரு.பொன்கருப்பசாமி அவர்களிடம் இதுபற்றி கேட்டபோது மேற்படி விண்ணப்பம் உங்கள் தகப்பனார் பெயரில் உள்ளது என்றும் முதலில் அதை உங்கள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்து பெயர் மாற்றம் ஆன பின்புதான் நீங்கள் இந்த திட்டத்தில் உங்கள் பெயரில் மின் இணைப்பு பெற முடியும் என்று தெரிவித்தார். உடனே மணிமுருகேசனும் கடந்த 05.08.2020 அன்று பெயர் மாற்றம் செய்ய உரிய ஆவணங்களுடன் திருச்செந்தூர் செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்தார். நானும் அவருடன் சென்றிருந்தேன். பின்பு பெயர்மாற்ற கடிதம் எண்.செ.பொ/வி/திர்/தொ.நு/உ.2/கோ.விவ/அ.எண்.754/20 நாள் 12.08.2020 —ஐ பெற்றோம். பின்பு உடனடியாக சாத்தான்குளம் உதவி மின் பொறியாளர் அலுவலகம் சென்று சிறப்பு (RSFS ரூ.10,000) முன்னுரிமை 2020-2021 திட்டத்தின் கீழ் பெற அணுகியபோது அவர்கள் மேற்படி விவசாய இடத்தையும் போர்வெல்லையும் பார்த்த பின்னர்தான் முன்பணம் பெறுவோம் என்று தெரிவித்து எங்களை திருப்பி அனுப்பி விட்டனர். பின்பு மீண்டும் ஒருநாள் சென்று கேட்ட போது அவர்கள் இந்த திட்டத்திற்கான தேதி முடிவடைந்து விட்டது என்று தெரிவித்து எங்களை திருப்பி அனுப்பி விட்டனர். பின்னர் மணிமுருகேசனும் அவரது வேலை விசயமாக ஹைதராபாத் சென்றுவிட்டார். பின்பு மேற்படி மின் இணைப்பு பெறுவது தொடர்பான வேலைகளை அவர் சார்பாக நான் பார்ப்பதற்கு எனக்கு ஒரு அங்கீகார கடிதம் கொடுத்தார். அதன் அடிப்படையில் நான் 27.10.2020-ம் தேதி 01.00-க்கு திருச்செந்தூர் செயற்பொறியார் அலுவலகம் சென்று செயற்பொறியாளர் திரு.பொன்கருப்பசாமியை சந்தித்து இதுபற்றி கேட்ட போது

அவர்கள் மேற்படி திட்டம் தேதி முடிவடைந்துவிட்டதால் இனிமேல் அதில் ஒன்றும் செய்ய இயலாது. நீங்கள் தக்கல் திட்டத்தில் உரிய பணம் கட்டி மின்சார இணைப்பு பெறவிரும்பினால் உரிய விண்ணப்ப படிவத்தில் விருப்ப மனுவாக பூர்த்தி செய்து அதனுடன் ரூபாய் 2.75 லட்சத்திற்கு DD எடுத்துக்கொண்டு வாருங்கள் என்று சொல்லி அதற்கான ஒரு காலி மனுவின் நகலும் என்னிடம் கொடுத்தார். அந்த மனுவிற்கு அவரது ஒப்புதலும் சாத்தான்குளம் உதவி மின் பொறியாளர் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள கடிதமும் தருகிறேன் என்றார். அவ்வாறு கடிதம் தருவதற்கு அவருக்கு தனியாக ரூ.10,000/- வேண்டும் என்று என்னிடம் கேட்டார். எனக்கு அப்போது வேறு வழி தெரியவில்லை சரி சார் என்று சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் வீட்டில் வந்து யோசித்து பார்த்ததிலும், எனது மைத்துனர் மணிமுருகேசனிடம் கலந்து பேசியதிலும் அரசாங்கம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் போது இவருக்கு லஞ்சமாக பணம் ஏன் கொடுக்கவேண்டும் என்று தோன்றியது. எனக்கும், மணிமுருகேசனுக்கும் செயற்பொறியாளர் பொன்கருப்பசாமிக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/- கொடுக்க விருப்பமில்லை. தக்கல் திட்டத்திற்கு கொடுக்கும் விருப்ப மனுவிற்கு அனுமதி வழங்க என்னிடம் லஞ்சம் கேட்கும் திரு.பொன்கருப்பசாமி செயற்பொறியாளர் மின்சார வாரியம் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், அவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.10,000/-, ரூ.2.75/- இலட்சத்திற்கான D.D. மணிமுருகேசன் அவரது பெயருக்கு மின் இணைப்பு பெறும் வேலைகளை பார்க்கும் வகைக்கு எனக்கு கொடுத்த அங்கீகார கடிதம், திருச்செந்தூர் மின்வாரிய செயற்பொறியார், மணிமுருகேசன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து கொடுத்த 12.08.2020 தேதியிட்டு கொடுத்த கடிதம், மேற்படி நிலத்துக்குரிய பட்டா நகல் மற்றும் உயில், கணேசன் நாடார் இறப்பு சான்று நகல், கணேசன் நாடாரின் வாரிசு சான்று நகல், பெயர் மாற்றத்தின்போது கொடுக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அதனுடன் உள்ள இணைப்புகளின் நகல்கள், மற்றும் 27.10.2020ம் தேதி செயற்பொறியாளர் அவர்கள் என்னிடம் கொடுத்த தக்கல் விருப்ப மனு நகல் மற்றும், பூர்த்தி செய்யப்பட்ட தக்கல் விருப்ப மனு ஆகியவற்றை வைத்துள்ளேன். அதன் நகல்களையும் தங்களிடம் ஆஜர் செய்கிறேன். இப்படிக்கு (கையொப்பம்) நாள் :-29.10.2020.

Honourable Madam,

Received the complaint on 29.10.2020 at 08.00 hrs, and after conducting secret enquiry and getting oral concurrence from the Director, V&AC, Chennai

through the Superintendent of Police, V&AC, Southern Range. I registered a case in Thoothukudi V&AC Cr.No.03/2020 U/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at about 09.30 hrs on 29.10.2020 Sd/- C.Jayasree, Inspector of Police, V&AC, Thoothukudi. 29.10.2020

முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை என்னுடைய விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

INSPECTOR OF POLICE
V&AC THOOTHUKUDI
29/10/2020